(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(11).] **பாராளுமன்றம்**

**1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்**

**2015 திசெம்பர் 19 சனிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2016 சனவரி 26, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

41/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேச அம்பாந்தோட்டை காட்டு யானைகள் முகாமைத்துவ ஒதுக்குப் பிரதேசத்தின் காணிகள் பலவந்தமாக கைப்பற்றப்படுகின்றன என்பதையும்;

(ii) காடுகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி ஒதுக்குப் பிரசேத்தினுள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) இதன் காரணமாக யானை – மனித மோதல் தீவிரமடைந்துள்ளதென்பதையும்;

(v) மேற்படி காட்டு யானைகள் முகாமைத்துவ ஒதுக்குப் பிரதேசத்தின் செயற்பாடுகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) உத்தேச அம்பாந்தோட்டை காட்டு யானைகள் முகாமைத்துவ பிரதேசத்தின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒதுக்குப் பிரசேத்தின் எல்லைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி ஒதுக்குப் பிரதேசத்தில் இடம் பெறுகின்ற மனித செயற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

92/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) படை உறுப்பினர்களது பிள்ளைகளுக்காக ஒதுக்கப்பட்ட பாடசாலைகள் தனியாகப் பேணிவரப் படுகின்ற கொள்கையை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்?

(ஆ) இராணுவத்தின் தியாகிகளான, உத்தியோகத்தர்கள் மற்றும் படைவீரர்கள் ஆகிய இரு பிரிவினருக்கும் சிறப்புரிமைகளை பெற்றுக்கொடுத்தல் அவசியமாயிருந்த போதிலும் இவர்களின் பிள்ளைகளுக்கு தனியான பாடசாலைகள் காணப்படுவதன் மூலம் சமூகத்தில் புதிய சமூக வகுப்பொன்றின் அடிப்படையில் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் மற்றும் படைவீரர்களின் பிள்ளைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(ii) இத்தகைய பாடசாலைகளை கல்வித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவந்து ஏனைய மாணவர்களையும் சேர்த்துக்கொண்டு பேணிவருவதையிட்டு பரிசீலிக்காமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

180/ '15

கௌரவ (டாக்டர்) ஏ. ஆர். ஏ. ஹபீஸ்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2 )

(அ) சுனாமி பேரழிவின் காரணமாக நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் வீடுகள் மற்றும் சொத்துக்களை இழந்துள்ள பல குடும்பங்கள் தற்போதுகூட அநாதரவான நிலையில் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வீடுகளை இழந்துள்ள ஆட்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்து அவர்களுக்கு நிரந்தர வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சும் இணைந்து மேற்படி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

196/ '15

கௌரவ விஜித ஹேரத்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) ஒருங்கிணைந்திருந்த வட - கிழக்கு மாகாண சபை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளாகப் பிரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாணத்தின் நிரந்தர குடியிருப்பாளர்களான 270 உத்தியோகத்தர்கள் வட மாகாண சபைக்கு இணைக்கப்பட்டனர் என்பதையும்;

(ii) சுமார் ஏழு வருட காலமாக மேற்கூறப்பட்டவாறு வதிவிடப் பிரதேசத்திற்கு வெளியில் பணியாற்றுவதன் மூலம் மேற்படி உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்கள் கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்காக பல சந்தர்ப்பங்களில் முயற்சியெடுத்துள்ள போதிலும் அது பயனளிக்கவில்லையென்பதையும்;

(iv) ஒருசில உத்தியோகத்தர்கள் மட்டும் அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெற்று இடமாற்றங்களைப் பெற்றுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கிழக்கு மாகாண குடியிருப்பாளர்கள் அம் மாகாண சபையில் பணியாற்றுவதற்காக மேற்கொள்ளும் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

198/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையின் நிறைவேற்றுப் பிரிவுக்காக பயிலிளவல் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகையில் வேண்டப்பட்டிருந்த கல்வித் தகைமைகள் யாவை;

(ii) லெப்டினன்ட் வை.கே. ராஜபக்ஷ NRX 2431 கொண்டிருந்த கல்வித் தகைமைகள் யாவை;

(iii) உரிய கல்வித் தகைமைகளுக்குப் புறம்பாக அவரை ஆட்சேர்ப்பதற்கு இருந்த விஷேட காரணம் யாது;

(iv) இதன் பொருட்டு பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டதா;

(v) இவர் கடற்படையில் சேர்ந்த திகதி மற்றும் பயிற்சியை நிறைவுசெய்த திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இற்றைவரை இவருக்கு கிடைத்த வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் மற்றும் பயிற்சிகள், வெளிநாட்டிலிருந்த காலப்பகுதி, வெளிநாடும் அரசாங்கமும் செலவிட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு;

(ii) 2007 ஆம் ஆண்டில் டார்மத்திலுள்ள பிரித்தானிய றோயல் கடற்படைக் கல்லூரியில் பயிற்சிக்காக இவர் தெரிவுசெய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவை; அது பிரித்தானிய அரசாங்கம் வழங்கிய புலமைப் பரிசிலொன்றா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) லெப்டினன்ட் ராஜபக்ஷ மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புலனாய்வுசெய்த மூவரடங்கிய கடற்படைக் குழுவின் அறிக்கைக்கிணங்க இவருக்கும் சம்பந்தப்பட்ட வேறு ஆட்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவை;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

206/ '15

கௌரவ ஹேசா விதானகே,— மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தோட்டங்களைச் சார்ந்து வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் தொடர்பாகவும், தோட்டங்களைச் சார்ந்த லயன் அறைகள் தொடர்பாகவும் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், தோட்டங்களைச் சார்ந்த வீடுகள், லயன் அறைகள் மற்றும் அவற்றைச் சார்ந்து வாழ்ந்து வருகின்ற மக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இவர்களில் பாடசாலைக்குச் செல்கின்ற வயதைச் சேர்ந்த பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களுள் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மின்சார வசதிகள் மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள் இல்லாத குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) (i) தோட்டங்களைச் சார்ந்து வாழ்ந்துவருகின்ற தமிழ் மக்களின் பொது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(iii) தோட்டங்களைச் சார்ந்துள்ள மக்களின் லயன் அறைகளை மையமாகக் கொண்ட வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவந்து இவர்களை முறைசார்ந்த வீடுகளில் குடியமர்த்துவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டத்தை நிறைவு செய்ய உத்தேசிக்கின்ற காலம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

208/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் காலாசார அலுவல்கள் திணைக்களத்தில் (வக்பு பிரிவில்) R/768 BT/65 இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மட்டக்களப்பு, "ஓட்டமாவடி முஜாஹிதீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு" இறுதியாக சட்டரீதியான நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்ட திகதி மற்றும் மேற்படி நியமனக் காலம் முடிவடைந்த திகதி யாது;

(ii) நீண்டகாலமாக சட்டரீதியான நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படாதுள்ள மேற்படி பள்ளிவாசலின் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்காகப் பேணிவர இயலாத நிலையேற்பட்டுள்ளதால் புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையொன்றினை துரிதமாக நியமிக்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

217/'15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மூப்புரிமைக்கேற்ப,

(i) உயர்நீதிமன்ற நீதிபதிகளின்;

(ii) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின்;

(iii) மேல் நீதிமன்ற நீதிபதிகளின்;

(iv) மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களின் நீதிபதிகளின்;

பெயர் பட்டியலொன்றையும் இவர்களின் நியமன திகதிகளையும் ஓய்வுபெறவுள்ள திகதிகளையும் அவர் சபையில் சமரப்பிப்பாரா?

(ஆ) (i) கடமை லீவு அல்லது சம்பளமற்ற லீவு பெற்றுக்கொண்டு வெளிநாடுகளில் நீதிபதிகளாக பணியாற்றும் (2015.11.01 வரை) இலங்கை நீதித்துறையைச் சார்ந்த நீதிபதிகள் உள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு வெளிநாட்டு சேவைக்கு செல்வதற்காக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி எத்தேதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளதென்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

231/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகளுக்கான உதிரிப்பாகங்களை வழங்கிய கம்பனிகள் யாவை;

(ii) சம்பந்தப்பட்ட கம்பனிகளைத் தெரிவுசெய்வதற்காக கேள்விப்பத்திர சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததா;

(iii) அவ்விதமாக தெரிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் அப்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை;

(iv) 2011 ஆம் ஆண்டில் இபோச தலைவருக்கும் இபோச பஸ்வண்டி உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்ட கம்பனியின் உரிமையாளருக்கும் இடையில் நிலவுகின்ற உறவுமுறைத் தொடர்பு யாது;

(v) பஸ்வண்டி உதிரிப்பாகங்களை வழங்குவதற்காக பதிவுசெய்துள்ள முகவர் கம்பனிகள் இருக்கையில் அதற்குப் புறம்பான ஒரு கம்பனிக்கு சம்பந்தப்பட்ட கேள்விப் பத்திரத்தை வழங்குவதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை;

(vi) இவ்வாறு முறைசாராத வகையில் தெரிவுசெய்யப்பட்ட கம்பனிக்கு தீர்வை வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(vii) மேற்படி தீர்வை வரிச் சலுகையைப் பயன்படுத்தி கொண்டுவரப்பட்ட பஸ்வண்டி உதிரிப்பாகங்களில் இபோசவிற்கு சிறிதளவும், பஞ்சிகாவத்தை வர்த்தகர்களுக்கு பெருமளவும் வழங்கி முறையற்ற விதத்தில் வருமானம் ஈட்டியமை சம்பந்தமாக நிதிசார் குற்ற விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புலனாய்வின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

252/ '15

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக பதிவுசெய்துள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

258/ '15

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 சனாதிபதித் தேர்தலின்போது சனாதிபதி வேட்பாளரான, தற்போதைய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் முன்வைக்கப்பட்ட “மைத்திரி ஆட்சியும் நூறு நாட்களில் புதியதொரு நாடும்” என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் 35 ஆம் இலக்கத்தின் கீழ், கடன் தகவல் பிரிவின் (CRIB) கறைநிரல் பட்டியலில் உள்ளடங்கி கடன் பொறியில் சிக்குண்டிருந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களையும் கடன் அட்டை உரிமையாளர்களையும் அதிலிருந்து மீட்டு தளர்த்தபட்ட நிபந்தனைகளுடன் கடனைச் செலுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) 2015.11.01 ஆம் திகதியாகும்போது மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சலுகை வழங்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் களினதும் கடன் அட்டை உரிமையாளர்களினதும் எண்ணிக்கை ஒவ்வொரு வங்கியின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதை அவர் இச்சபைக்குச் சர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் தளர்த்தப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கடனை செலுத்துவதற்கான வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களினதும் கடன் அட்டை உரிமையாளர்களினதும் பெயர், முகவரி மற்றும் பெறப்பட்ட கடன் தொகை பற்றிய விபரமானதோர் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

270/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கடற்படையின் தெற்குத் தலைமையகத்தின் ஆயுதக் களஞ்சியசாலையில் வணிகக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் கடல் பாதுகாவலர்களது ஆயுதங்களை வைத்திருத்தல் நடைபெற்ற காலப்பகுதி யாது;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் குறித்த நடவடிக்கையின் மூலம் கடற்படை பெற்றுக்கொண்ட வருமானம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காலி துறைமுகத்துக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் அவன்காட் கம்பனியினால் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் பேணிவரப்பட்ட காலப்பகுதி யாது;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் குறித்த நடவடிக்கைகளின் மூலம் கடற்படை மற்றும் வரையறுக்கப்பட்ட ரக்னா லங்கா பாதுகாப்பு கம்பனி பெற்ற வருமானம் வெவ்வேறாக யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்தை பேணிவருதல் அவன்காட் கம்பனியினால் கடற்படைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த கம்பனி ஏதேனும் சட்டத்தை மீறியுள்ளதாக நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

279/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) சீனாவுடன் நேச நகரங்களாக அபிவிருத்தி அடைந்துள்ள இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) சம்பந்தப்பட்ட நகரங்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு நகரமும் இதனூடாக பெற்றுள்ள நன்மைகள் தனித்தனியாக யாவை;

(iv) நேச நகரங்கள் கருத்திட்டத்தின் கீழ் இலங்கையின் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து சீன அரசாங்கத்தின் உள்ளூராட்சி நிறுவனங்கள் பெற்றுள்ள நன்மைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

54/ '15

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுக வளவினுள் சீனி சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா;

(ii) அவ்வாறாயின் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் வெளிநாட்டு நிறுவனமாயின் நாடு யாது;

(iii) அக்கம்பனியின் பணிப்பாளர் சபையின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனி முதலீடு செய்யும் பணத் தொகை யாது;

(ii) அரசாங்கத்தினால் இக்கம்பனிக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவை;

(iii) சீனி சுத்திகரிப்புத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதன் மூலம் இந்நாட்டுக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை;

(iv) மேற்படி தொழிற்சாலையின் மூலம் ஒரு வருடத்தில் சுத்திகரிக்க எதிர்பார்க்கப்படும் சீனியின் தொகை எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இத்தொழிற்சாலையின் காரணமாக இலங்கையின் சீனிக் கைத்தொழில் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

239/ '15

கௌரவ விமலவீர திசாநாயக்க,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வங்கிகளில் இரண்டு இலட்சம் ரூபா அல்லது அதிலும் குறைந்த தொகைக்கு அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை மீட்கும் போது, மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அதற்காக அறவிடப்படும் அதிக வட்டி மற்றும் அபராதத் தொகையை பதிவழிப்புச் செய்ய அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுத்திருக்குமானால், அதனுடன் தொடர்புடையதாக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றிக்கைகளின் பிரதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) ஒவ்வொரு வங்கி மூலமும் மேற்படி வட்டியையும் அபராதத் தொகையையும் பதிவழிப்புச் செய்துள்ள பயனாளிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) அரசாங்கம் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அதற்கான நிதி ஏற்பாடுகளைச் செய்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த பணத்தொகை ஒவ்வொரு வங்கி ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2016 சனவரி 27, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

59/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நக்கள்ஸ் ஒதுக்கத்தில் ஏலக்காய் செய்கை நடைபெறுகின்றதென்தையும்;

(ii) இதனால் ஒதுக்கத்துக்கு பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மாத்தளை வன பாதுகாப்புத் திணைக்கள அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு அரசியல்வாதிகளிடமிருந்து அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றதென்பதையும்;

(iv) ஒதுக்கத்தின் அழிவு முழு நாட்டினதும் சுற்றாடல் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஒதுக்கத்தில் காணப்படும் அனுமதியற்ற பயிர்ச்செய்கை நிலத்தின் பரப்பளவு எவ்வளவு;

(ii) அனுமதியற்ற பயிர்ச்செய்கையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாததேன்;

(iii) ஒதுக்கத்துக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்ப்பதற்கு இதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) ஏலக்காய் செய்கையை ஒதுக்கத்திலிருந்து அகற்ற நடவடிக்கை மேற்கொள்வாரா;

(v) ஆமெனில், அது எத்திகதியில்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒதுக்கத்தில் வாழும் ஓரிடம் சார்ந்த விலங்குகள் மற்றும் தாவரங்கள் தொடர்பான தொகை மதிப்பு இறுதியாக மேற்கொள்ளப்பட்டது எப்போது;

(ii) அதன் பிரகாரம் ஒதுக்கத்தில் வாழ்கின்ற ஓரிடம் சார்ந்த தாவரங்கள் மற்றும் விலங்குகள் யாவை;

(iii) ஏலக்காய் செய்கை காரணமாக ஓரிடம் சார்ந்த தாவரங்கள் மற்றும் விலங்குகளின் அடர்த்தி எவ்வளவு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதென்பதை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அது எத்திகதியில்;

(v) ஏலக்காய் செய்கை காரணமாக ஒதுக்கத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பாக அறிக்கையொன்றைக் கோருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(vi) ஆமெனில், அது எத்திகதியில்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

210/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு-அவிசாவளை வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் வெல்லம்பிட்டி சந்தி தொடக்கம் அம்பத்தலே சந்தி வரை இதுவரை நடைமுறைப்படுத்தப்படாததால் தினந்தோறும் இவ்வீதியில் அதிக வாகன நெரிசல் நிலவுகின்றதென்பதை அவர் அறிவாரா;

(ஆ) தெற்கு அதிவேக வீதியின், கடுவெல மற்றும் கடவத்த இடைமாறல் ஊடாக பிரவேசிக்கும் வாகனங்களும் இவ்வீதியினூடாக கொழும்பு நகரத்தினுள் பிரவேசிக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து வாகன நெரிசல் மேலும் அதிகரித்து வருகின்றமையால், குறிப்பிட்ட வீதியை விரிவாக்கி அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

221/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்காக,

(i) விண்ணப்பித்திருந்த ஒட்டுமொத்த மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) 150 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை;

(iii) 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை;

(iv) 35 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு மாவட்டத்தின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறுவதற்கான உச்சமட்ட புள்ளிகள் சதவீதத்தையும் குறைந்தபட்ச புள்ளிகள் சதவீதத்தையும் பெற்றுக்கொண்ட 100 பாடசாலைகள் வரிசைக் கிரமப்படி யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பிரசித்திபெற்ற பாடசாலைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட குறைந்தபட்ச புள்ளி மட்டங்கள் மற்றும் அதன் பிரகாரம், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர்களுடைய எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) கடந்த தேர்தல் பிரகடனத்தின் மூலம் 5 ஆம் தர புலமைப்பரிசில் மாணவர் உதவுதொகை அதிகரிக்கப்படுமென வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்தனை பிள்ளைகளுக்கு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

233/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) SML Frontier Automotives (Pvt.) Ltd. நிறுவனத்தினால் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டுக்கு லேண்ட் ரோவர் டிபெண்டர் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், வழங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் இவ்வாகனங்களின் மொத்தப் பெறுமதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) லேண்ட் ரோவர் வாகனங்களின் சந்தைப்படுத்தலுக்காக இந்நாட்டிலுள்ள முகவர்கள் யாவர்;

(ii) லேண்ட் ரோவர் வாகனங்களைக் கொள்வனவு செய்கையில், வழங்குநரைத் தெரிவு செய்வதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட பெறுகை முறையியல் யாது;

(iii) இவ்வாகனங்களைக் கொள்வனவு செய்கையில், இலங்கை அரசாங்கத்தினால் நாணயக் கடிதங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அது எந்நிறுவனம் சார்பில்;

(iv) மேற்படி நிறுவனம் லேண்ட் ரோவர் வாகன உற்பத்தியாளரா;

(v) இன்றேல், அந்நிறுவனத்தின் பெயர் யாது;

(vi) SML Frontier Automotives (Pvt.) Ltd. நிறுவனத்தின் உரிமையாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை;

(vii) இவ்வாகனங்களைக் கொள்வனவு செய்கையில் நடைபெற்ற நிதி முறைகேடுகள் தொடர்பில் பொலிஸ் நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாட்டுக்குரிய புலனாய்வின் முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

262/ '15

கௌரவ (டாக்டர்) ஏ. ஆர். ஏ. ஹபீஸ்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் பது/முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) நீண்ட காலம் தொடக்கம் பௌதீக மற்றும் மனித வளப் பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(ii) இந்தப் பாடசாலையில் உயர் தரம் விஞ்ஞான மற்றும் கணித பிரிவுகளுக்கு விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள், கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள், சாதாரண தர வகுப்புகளுக்கு கணித (தமிழ் மொழி மூலம்) ஆசிரியர்கள், 1 - 6 ஆம் தரங்களுக்கு விஞ்ஞான (ஆங்கில மொழி மூலம்) ஆசிரியர்கள் ஆகியோருக்கான மற்றும் கல்விசாரா பணியாட்தொகுதியின் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) பாடசாலைக் காணிகளுக்கு பாதுகாப்பு வேலி, கேட்போர் கூடம், வகுப்பறைக்கான கட்டிடம் போன்ற பௌதீக வளங்களின் தேவை காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்தப் பாடசாலைகளுக்கு பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்குவதற்கும் “அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” என்ற கருத்திட்டத்தின் கீழ் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலையாக அபிவிருத்தி செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

272/ ’15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின்போது தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசாங்கத்தினால் எரிபொருள் மீது அறவிடப்படும் வரி நீக்கப்படுமென மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது என்பதையும்;

(ii) 2015 சனவரி 16 ஆம் திகதி அப்போதைய மின்வலு, எரிசக்தி அமைச்சர் எரிபொருள் மீது அறவிடப்படும் வரியை நீக்குவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்டவாறு நீக்கப்பட்ட வரி வகைகள் மற்றும் அவற்றின் தொகைகள் யாவை என்பதையும்;

(ii) தற்போது எரிபொருள் மீது காணப்படும் வரி வகைகள் யாவை என்பதையும்;

(iii) 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.09.30 ஆம் திகதி வரை ஒவ்வொரு வரி வகையின் மூலமும் ஈட்டப்பட்ட வருமானம் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

281/ ’15

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) லோலெவல் வீதியில் அம்பதலேயில் இருந்து ஒருகொடவத்தை வரையான பகுதி அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) அதிவேக வீதி வழியாக வந்து கொட்டாவையில் இருந்து கொழும்பு செல்வதற்காக எடுக்கின்ற நேரத்தை விட குறைந்த நேரத்தில் இந்த வீதி வழியாக கடுவெலவில் இருந்து கொழும்பை அடைய இயலுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த வீதியை அபிவிருத்தி செய்வதற்காக,

(i) உள்ள தூரத்தின் அளவு யாது;

(ii) உள்ள தடைகள் யாவை;

(iii) மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை யாது;

(iv) சுவீகரிக்கப்படும் காணிகளுக்காக நிகழ்கால சந்தைப் பெறுமதிக்கிணங்க நட்டஈடு வழங்கப்படுமா;

(v) ஆரம்பிக்கும் திகதியும் நிறைவு செய்யும் திகதியும் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

309/ ' 15

கௌரவ ஹேஷா விதானகே,— மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கொழும்பு, புறக்கோட்டைக்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மிதக்கும் வர்த்தக நிலையங்கள் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனம் யாது;

(ii) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாது;

(iii) மேற்படி பணத்தை ஈடுபடுத்திய நிறுவனம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களின் மொத்த எண்ணிக்கை யாது;

(ii) வர்த்தகர்களுக்கு கையளிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் அரசாங்கம் உழைக்கும் மாதாந்த சராசரி வருமானம் யாது;

(ii) கருத்திட்டத்தினால் நஷ்டம் ஏற்படுகின்றதாயின், குறித்த மாதாந்த நஷ்டம் யாது;

(iii) தற்போது இந்த கருத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா;

(iv) தோல்விகண்டுள்ளதாயின், இதற்கு ஏதுவாயமைந்த காரணிகள் யாவை;

(v) இந்த கருத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான உத்தேச வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா;

(vi) ஆமெனில், குறித்த வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

311/ '15

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000.11.29ஆந் திகதி திருகோணமலை பிரதேச கடல் எல்லையில் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்காகி "துஷாரி" எனப்படும் மீன்பிடிப் படகு அழிவடைந்து, அதிலிருந்த மீனவர்கள் காணாமற்போனார்கள் என்பதையும்;

(ii) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. ஜீ. பியசேன, தமது ධීජදෙ/සැ/02/06ඕආර් ஆம் இலக்க 2003.01.10 ஆம் திகதிய கடிதத்தில், மேற்படி சம்பவம் உண்மையானதெனவும், குறிப்பிட்ட மீனவர்களின் தங்கிவாழ்வோருக்கு நஷ்டஈடு வழங்குவது உகந்ததெனவும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதையும்;

(iii) காணாமற்போயுள்ள மீனவர்களில் குமாரகே தொன் பியரத்ன என்பவருக்கு இதுவரையில் நஷ்டஈடு அல்லது மரணச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. பியரத்னவின் விதவையான மனைவி, திருமதி கே.எம்.பிரிஜெட் காந்தி, முன்னாள் சனாதிபதி மற்றும் முன்னாள் அமைச்சருக்கு எழுத்து மூலமாக மேன்முறையீட்டை சமர்ப்பித்த போதிலும், இது தொடர்பில் நியாயமான நடவடிக்கையெதுவும் மேற்கொள்ளப்படாமை பாரியதோர் அநீதியாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், இவருக்கு நஷ்டஈடு செலுத்துவதற்கும், மரணித்த கணவருடைய மரணச் சான்றிதழை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

315/ '15

கௌரவ விமலவீர திசாநாயக்க,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) அம்பாறை நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் நவகம்புர கிராமத்தில் 25 வீடுகளை நிர்மாணிப்பதெற்கென தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 25 காணித்துண்டுகள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி காணிகளை பகிர்ந்தளிக்கும் போது 2008/4 ஆம் இலக்க சுற்றறிக்கையோ அல்லது வசிப்பதற்கு காணிகளை பெற்றுக் கொடுக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய வேறு கட்டளைச் சட்டங்களோ அல்லது முறைசார்ந்த செயல்நடைமுறைகளோ பின்பற்றப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி காணிகள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும், அதற்கு அம்பாறை பிரதேச செயலாளரிடமிருந்து முறைசார்ந்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iv) பகிர்ந்தளிக்கப்பட்ட காணிப் பயனாளிகளின் பெயர்ப்பட்டியல்களைத் தயார் செய்யும் போது அல்லது சிபாரிசு செய்யும் போது இடம்பெற்றுள்ள அநீதியான நடவடிக்கைகள் காரணமாக, நவகம்புர கிராம வீதியிலும் மற்றும் அம்பாறை நகரத்திலும் வசிப்பதற்கு காணித் துண்டொன்று அல்லது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்கள் தொடர்பிலும் முறைசார்ந்த விசாரணையை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி காணி பகிர்ந்தளிப்பிலுள்ள அநீதியான வேலைத்திட்டம் காரணமாக அம்பாறை நகர சபை ஆளுகைப் பிரதேசத்தின் அ(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை இழந்துள்ள மக்களுக்கு நேர்ந்துள்ள பாதிப்பைச் சீர் செய்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

322/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசனஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செய்தித் திணைக்களத்தினால் ஊடக பேச்சுவார்த்தைகள் மற்றும் ஏனைய விசேட சந்தர்ப்பங்களுக்காக சிற்றுண்டிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் யாவை;

(ii) இதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா;

(iii) குறித்த கேள்விப் பத்திரங்களுக்காக விலைகளை முன்வைத்த நிறுவனங்கள், முன்வைக்கப்பட்ட விலைகள் மற்றும் முன்வைக்கப்பட்ட சேவைக் கட்டணங்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி வருடங்களில் சிற்றுண்டிகளை வழங்கிய நிறுவனத்துக்கு செலுத்திய சேவைக் கட்டணங்களின் சதவீதம் மற்றும் சேவைக் கட்டணமாக செலுத்திய பணத்தொகை யாது;

(v) 2015 மே 28 ஆம் திகதி முதல் குறித்த நிறுவனத்துக்கு செலுத்திய சேவைக் கட்டண சதவீதம் மற்றும் பணத்தொகை யாது;

(vi) இதன் பிரகாரம், சேவைக் கட்டணமாக மாத்திரம் மேலதிகமாக செலுத்தியுள்ள பணத்தொகை யாது;

(vii) இந்த கொடுக்கல் வாங்கலில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதா;

(viii) ஆமெனில், குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

61/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்கின்ற இலங்கையர்களுக்கு பயிற்சியளிக்கின்ற நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பயிலுநர்களுக்கு அரசாங்கம் கொடுப்பனவொன்றை வழங்குவதாயின், அத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி பயிலுநர்கள் அரசாங்கத்திற்கு ஏதேனும் பணத்தொகையை செலுத்த வேண்டியிருப்பின், அத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பயிற்சி நிலையங்களில் பயிலுநர்களுக்கு இலங்கையினதும் மற்றும் அவர்கள் சேவைக்காக செல்வதற்கு எதிர்பார்க்கின்ற நாட்டினதும் குடிவரவு, குடியகல்வு சட்டங்கள், சுங்கச் சட்டங்கள் மற்றும் செலாவணிச் சட்டங்கள் பற்றிய அறிவு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2016 சனவரி 28, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

62/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) வீட்டுப் பணியாளர்களாக வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் பாவனைக்கு உதவாததும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டதுமான பொருட்களை இந்நாட்டிற்கு கொண்டுவருகின்றார்கள் என்பதையும்;

(ii) இதற்கு இவர்கள் பெருமளவு பணத்தை செலவிட வேண்டியுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி சிதைவடைந்த பொருட்கள் எமது நாட்டின் சூழலுக்கும் பிரச்சினையை தோற்றுவிக்கக் கூடுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாடுகளிலிருந்து பாவிக்கப்பட்ட பழைய வீட்டுத் தளபாடப்பொருட்கள் போன்றவற்றை இந்நாட்டிற்கு கொண்டுவருவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

80/ '15

கௌரவ சந்திம கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) சுமார் கடந்த ஒரு தசாப்த காலமாக தொல்பொருட்கள் மற்றும் புதைபொருட்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளமை மற்றும் திருடர்கள் கைப்பற்றியுள்ளமை பற்றி பல்வேறு ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களம் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி சட்ட நடவடிக்கைகள் மூலம் தவறாளிகளாக்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதிருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

211/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த அரசாங்கத்தினால் 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கும் 5000 ஆரம்ப பாடசாலைகளுக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் ED/3/37/6/147/sub ஆம் இலக்க 2013.01.11 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம், 1000 இரண்டாம் நிலை பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு சமாந்திரமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருணாகல், இரத்தினபுரி, பொலனறுவை, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, காலி, மாத்தறை, மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குரிய தமிழ் மொழிமூல முஸ்லிம் ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவுகளை முன்வைத்துள்ள மக்கள் பிரதிநிதிகளின் பெயர்கள், பதவிகள் மற்றும் அவ்வாறு முன்மொழியப்பட்ட பாடசாலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி முன்மொழிவுகளில் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) குறிப்பிட்ட பாடசாலைகள் யாவையென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

234/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் சனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் அண்ணளவாக ரூபா 6 1/2 கோடி செலவிடப்பட்டு கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடாத்தப்பட்ட வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் தேசிய மாநாட்டின் ஊடாக பொதுமக்களின் பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி மாநாட்டுக்கு ரூபா 63,723,574/- செலவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கிய அதிகாரி யாரென்பதையும், இவருக்கு அத்தகைய அங்கீகாரம் வழங்குவதற்கான அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iii) மாநாடொன்றுக்காக இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை செலவிடுகின்ற போது கேள்விப்பத்திரம் கோரும் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக திணைக்கள மட்டத்தில் ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி விசாரணையின் முடிவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக நிதிசார் குற்றப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் புலனாய்வுகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) வாழ்வின் எழுச்சி திணைக்களம் இழந்துள்ள ரூபா 06 கோடிக்கு மேற்பட்ட பணத் தொகை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்படி பணத்தை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

263/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) பதுளை, மஹியங்கனை வீதி, இல.93/1 இல் வசிக்கும் திரு. என்.ஏ. அசீஸ் வெலிமடவத்த, ஹத்தவுல்ல பிரிவில் குடியிருப்பதற்கும், பண்ணை ஒன்றை வைத்திருப்பதற்குமென காணித்துண்டொன்றுக்கு விண்ணப்பித்துள்ளார் என்பதையும்;

(ii) மேற்படி காணித் துண்டு தொடர்பில் வழக்கொன்று விசாரணையில் இருந்து வந்ததால் இவரின் விண்ணப்பத்தை பின்னர் ஆராய பதுளை மாவட்ட காணி சீர்திருத்த நிருவாக சபை முடிவு செய்துள்ளது என்பதையும் (தொடர்பு இலக்கம் ஓ/ஓ/ஓ/01 மற்றும் 2002/09/05 ஆம் திகதி);

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி வழக்கு விசாரணை முடிவுக்கு வந்துள்ளதால் திரு. அசீசின் கோரிக்கையை மீண்டும் ஆராய சம்பந்தப்பட்ட பிரிவுக்கு பணிப்புரை வழங்குவாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

273/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தேசிய பாதுகாப்பிற்கும் சனநாயகத்திற்கும் ஆபத்து என்பதால், 2015 சனவரி 08 ஆம் திகதி இரவு சனாதிபதி தேர்தல் பெறுபேறுகளை இடைநிறுத்துவதற்கான சூழ்ச்சி பற்றி முன்னுரிமை அடிப்படையில் புலனாய்வு செய்யுமாறு கோரி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீரவினால் 2015.01.14 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வு நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி புலனாய்வு பற்றிய சட்ட மாஅதிபரின் அபிப்பிராயம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

282/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கொலன்னாவ பிரதேசம் போதைவஸ்து விநியோகிக்கும் ஒரு நிலையமாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், ஒரு மாதத்தில் இப்பிரதேசத்தினூடாக விநியோகிக்கப்படும் போதைவஸ்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளதா;

(iii) கொலன்னாவ பிரதேசத்தை மையமாகக்கொண்டு நடைபெறும் போதைவஸ்து விநியோகத்தை நிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) இதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

312/ '15

கௌரவ ஜே. எம். ஆனந்த குமாரசிறி,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள ருஹுணு மகா கதிர்காம ஆலயத்திற்கு சொந்தமான காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட காணியிலிருந்து நபர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணியின் ஏக்கர் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி காணிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆலயத்திற்கு சொந்தமான காணிகள் பெருமளவில் வர்த்தகர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுவதால் சேனைப் பயிர்ச் செய்கையின் மூலம் வாழ்க்கையை கொண்டுநடாத்துகின்ற விவசாயிகளுக்கு விவசாயத்தில் ஈடுபடுவதற்குள்ள உரிமை இழக்கப்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி விவசாயிகளுக்கு பயிரிடுவதற்கான காணிகளை பெற்றுக்கொடுக்கும் முறையியலொன்றை தயாரிப்பாரா என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் மொனராகலை மாவட்டத்தில் உருவாகக்கூடிய தீவிர காணிப் பிரச்சினையை கருத்திற்கொண்டு தொடர்ந்தும் பெருமளவில் வர்த்தகர்களுக்கு காணிகள் பெற்றுக்கொடுக்கப்படுவதை இடைநிறுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

313/ '15

கௌரவ ஹேஷா விதானகே,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரக்வான, மாதம்பே வீதியை காப்பட் இடும் கருத்திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதென்பதையும்;

(ii) ஆரம்பத் திட்டம் பாரியளவில் மாற்றப்பட்டு கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதையும்;

(iii) பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு மீண்டும் ஆரம்பத் திட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுப்பதற்கு இணங்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆரம்பத் திட்டம் பாரியளவில் மாற்றப்பட்டு கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) ஆரம்பத் திட்டத்திற்கு அமைவாக மேற்படி வீதியின் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டம் உரியவாறு மேற்கொள்ளப்படாமையால் மேலதிகமாக செலவிட நேரிடுகின்ற பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத்தை பொறுப்புக்கூறவேண்டியவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

63/ ’15

கௌரவ புத்திக பத்திரண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) தற்போது இலங்கையில் பெருமளவில் இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கழிவுப்பொருட்களில் ஒரு பகுதி பாதுகாப்பற்ற முறையில் சூழலுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் சூழலுக்கு வெளியேற்றப்படுதல் சூழல் மாசடைதலுக்கு பிரதானமான காரணியாக மாறியுள்ளதென்பதையும்;

(iv) மக்களின் சுகதாரத்திற்கும் இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் அச்சுறுத்தலாக அமைகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் ஆண்டொன்றுக்கு அகற்றப்படும் இலத்திரனியல் கழிவுப்பொருட்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் சம்பந்தமாக வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) தற்போது அவ்வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலத்திரனியல் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் பற்றி ஏதேனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆய்வை மேற்கொண்ட நிறுவனத்தின் பெயர் மற்றும் அவ்வாய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

216/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்திலிருந்து கொலொன்னாவை (வதுல்லவத்த மற்றும் மஹபுத்கமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவு) ஊடாக இடப்பட்டுள்ள உயர் மின்னழுத்த மின் கம்பிகளின் வோல்ற் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உயர் மின்னழுத்த மின் கம்பிகளை இடும்போது உருக்கு மின் கம்பங்களை நடுவதற்காக சுவீகரிக்கப்பட்ட தனியார் காணிகள் யாவையென்பதையும்;

(iii) அதற்கான இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி காணிகளின் உரிமையாளர்களாக இனங்காணப் பட்டிருந்தவர்களின் பெயர்கள், முகவரிகள், இழப்பீடாக வழங்கப்பட்ட பணத்தொகை மற்றும் இழப்பீடு வழங்கப்பட்ட திகதி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

283/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார் ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் ஒரே சமனான அனுகூலங்கள் வழங்கப்படுகின்றனவா;

(ii) இன்றேல், அனுகூலங்கள் வழங்கப்படும் முறையியலொன்று உள்ளதா;

(iii) ஆமெனில், அம்முறையியல் யாது;

என்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2007 ஆம் ஆண்டில் அப்போதைய கல்வி அமைச்சரால் அடிக்கல் நடப்பட்ட கொட்டிகாவத்தை ராஜசிங்ஹ வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

(ii) மேற்படி பாடசாலையில் நிலவும் 13 ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு;

(iii) மேற்படி பாடசாலையின் பழுதடைந்துள்ள கட்டடங்களை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) " அண்மையிலுள்ள பாடசாலை" சிறந்த பாடசாலை எனும் வேலைத்திட்டம் எவ்வளவு காலத்தில் ஆரம்பிக்கப்படும்;

(ii) இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் ஒரே அளவான எண்ணிக்கையில் பாடசாலைகள் தெரிவு செய்யப்படுமா;

(iii) ஆமெனில், இப்பாடசாலைகளின் எண்ணிக்கை யாது ;

(iv) இந் நடைமுறை ஒவ்வொரு பிரதேசத்திலும் சமாந்தரமாக ஆரம்பிக்கப்படுமா;

(v) முன்னுரிமை வழங்கப்படும் பிரதேசங்கள் உள்ளனவா;

(vi) ஆமெனில், இப்பிரதேசங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2016 பெப்புருவரி 09, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

69/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இந்து சமுத்திரத்தின் சர்வதேச கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு சீன படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த அனுமதி வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி படகுகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான உடன்படிக்கை தொடர்பான நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iv) இவ்வாறு அனுமதி வழங்கப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சர்வதேச கடலில் மீன் பிடிக்கும் இலங்கைப் படகுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) சீனப் படகுகளின் காரணமாக இலங்கை மீனவர்களுக்கு ஏற்படுகின்ற அநீதியை ஒழிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) சீனப் படகுகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பதிலாக இலங்கையர்களுக்கு பாரிய மீன்பிடிப் படகுகளை பெற்றுக்கொள்வதற்கு உதவி வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இலங்கையர்களுக்கு சர்வதேச கடலில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான பாரிய மீன்பிடிப் படகுகளையும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களையும் தேவையான வசதிகளையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்; எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

222/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் ஐ-ரோட் (i-Road) என்ற பெயரில் விசேட கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்கு கடன் வழங்கிய வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களோடு கடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அதற்குரிய நிபந்தனைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஐ-ரோட் கருத்திட்டத்திற்காக,

(i) தெரிவு செய்யப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்;

(ii) அவ்வீதிகள் தெரிவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) ஒவ்வொரு வீதியையும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த நிறுவனம் யாதென்பதையும்;

(iv) சம்பந்தப்பட்ட நிர்மாணிப்பு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி உடன்படிக்கைகளின் பிரகாரம் நிர்மாணிப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி யாதென்பதையும்;

(vi) 2015.11.01 ஆம் திகதியளவில் நிர்மாணிப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட வீதிகள் யாவையென்பதையும்;

ஒவ்வொரு பிரதேச சபை வாரியாக தனித்தனியாக அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

236/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2015 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் மூலம், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் புகைப்படத்துடன் கூடிய 50 இலட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டு ரூபா 29,400,000 பணத் தொகை முறைகேடாக பயன்படுத்தப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆண்டுக்காக 18 இலட்சம் சமுர்த்தி பெறும் குடும்பத்தினரிடையே விநியோகிப்பதற்கு 50 இலட்சம் பஞ்சாங்கங்கள் அச்சிடப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) குறித்த செலவை அங்கீகரித்த அதிகாரி யாரென்பதையும்;

(iii) இவருக்கு மேற்படி பணத் தொகையை அங்கீகரிக்கும் அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி 50 இலட்சம் பஞ்சாங்கங்களை அச்சிட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(v) அதன் பொருட்டு பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வாழ்வின் எழுச்சி நிதியத்தின் நிதியை தமது கட்சியின் தேர்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிதி முறைகேடாகப் பயன்படுத்தல் தொடர்பாக நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் புலனாய்வின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) ஏற்புடைய திணைக்களம் அல்லது அமைச்சு மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன்போது மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) இதற்கான செலவு வாழ்வின் எழுச்சி நிதியத்திலிருந்து ஏற்கப்பட்டிருப்பின், ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

249/ '15

கௌரவ எம். எச். எம். சல்மான்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2015.10.15 ஆம் திகதி பிற்பகல் கடும் மழையுடன் கூடிய காலநிலை நிலவிய வேளையில், கண்டி கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் பாதுகாப்பற்ற வடிகாலில் வீழ்ந்ததால் க/பதியுதீன் மஹமூத் மகளிர் வித்தியாலயத்தில் உயர் தர வகுப்பில் கல்வி கற்ற மாணவி பாத்திமா அஸ்ரா மரணமடைந்ததை அவர் அறிவாரா?

(ஆ) எதிர்பாராத விதமாக நிகழ்ந்த விபத்தில் மரணமடைந்த மேற்படி மாணவியின் பிரிவால் துயரத்தில் ஆழ்ந்துள்ள இவரது பெற்றோருக்கு இழப்பீட்டுத் தொகையொன்றை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

264/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பளை, ஜயமாலாபுர, நாவலப்பிட்டி வீதி, இலக்கம் 288 இல் வசிக்கும் திரு.எம்.ஜே.எம். அக்பருக்குச் சொந்தமான, நுவரெலியா, லோஸன் வீதி, வரிப்பண இலக்கம் 58 இல் அமைந்திருந்த அக்பர் டிரேடர்ஸ் எனும் வியாபார நிலையம் 1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யூலை கலவரத்தின் போது சில காடையர்களால் தீவைத்து அழிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி வியாபார நிலையத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்கு இழப்பீடு கோரி இவர் நுவரெலியா பிரதேச செயலாளர் ஊடாக (නුඑ/4/3/52 ஆம் இலக்க 2005/08/17 ஆம் திகதிய கோப்பு) சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விண்ணப்பித்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ඊ/ඊ/2342 ஆம் இலக்கத்தின் கீழ் வர்த்தகக் கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருந்த மேற்படி வியாபார நிலையம் அழிக்கப்பட்டதால் வியாபார நடவடிக்கையை முற்றாக இழந்து நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியிருக்கும் திரு. அக்பருக்கு இழப்பீடு வழங்குவதில் தாமதம் ஏற்பட செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) குறித்த இழப்பீட்டுத் தொகையை உடனடியாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

276/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.01.09 ஆம் திகதி முதல் 2015.10.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில்,

(i) பிணை வழங்கப்பட்ட பயங்கரவாத சர்வதேச நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) பிணை வழங்கப்பட்ட பயங்கரவாத பிரதிவாதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) சனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் தவறாளிகளானவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

284/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— புத்த சாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று அமைச்சிடம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) விகாரைகளுக்கு நிதி ஒதுக்குகின்ற முறையியல் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையில் இருக்கின்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அறநெறிப் பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

(iii) அப்பணத் தொகை போதுமானதா என்பதையும்;

(iv) அவ்வாறின்றேல், அப்பணத்தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

314/ '15

கௌரவ ஹேசா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்பிலிபிட்டிய சனாபதி வித்தியாலயத்தில் முதலாம் ஆண்டுக்கு பிள்ளைகளை அனுமதிப்பதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) அதிபர் இதில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இது தொடர்பாக தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் விசாரணைகளை நடாத்தியுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனில், விசாரணை நடாத்தப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி விசாரணைகளின் பெறுபேறு யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முறைகேடுகளுடன் தொடர்புடைய அதிபர் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வித்தியாலயத்தின் எதிர்காலம் தொடர்பாக மேற்கொள்ளும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

323/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டில் தற்சமயம் இனங்காணப்பட்டுள்ள தெலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இந்நோயாளர்கள் மாவட்ட அடிப்படையில் பரந்துகாணப்படும் விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004.07.02 ஆம் திகதி அப்போதைய பிரதி சுகாதார அமைச்சரின் தலைமையில் சுகாதார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் எண்புமச்ச ஸ்டேம் கலங்கள் பொருத்தும் மத்திய நிலையமொன்றை குருணாகல் போதனா வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு இணங்கப்பட்டதென்பதையும்;

(ii) இதற்கென வடமேல் மாகாண சுகாதார அமைச்சினால் ரூபா 100 இலட்சம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி எண்புமச்ச பொருத்துதலுக்காக பயிற்றப்பட்ட மருத்துவர்கள் அரசாங்க வைத்தியசாலைகளில் உள்ளனரென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இந்நாட்டில் தனியார் வைத்தியாசாலையொன்றில் எண்புமச்ச ஸ்டேம் கலம் பொருத்துதலை மேற்கொண்டு தெலசீமியா நோயாளர்கள் குணப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இற்றைவரை எண்புமச்ச ஸ்டேம் கலங்களை பொருத்தும் மத்திய நிலையமொன்றை குருணாகல் போதனா வைத்தியாசாலையில் அல்லது ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியாசாலையில் அல்லது பிறிதொரு அரசாங்க வைத்தியசாலையில் நிறுவாதிருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) தெலசீமியா நோயாளர்களுக்கு தற்போது காணப்படும் மிகச் சிறந்த சிகிச்சை முறையொன்றான ஸ்டேம் கலங்கள் பொருத்துதலை அரசாங்க வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

70/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாடுகளுக்கு ஏற்படும் மாட்டுக்குரை மற்றும் கோமாரி நோய் மிகத் தீவிரமாக இலங்கை பூராவிலும் பரவிச் செல்கின்றதென்பதையும்;

(ii) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மேற்படி நோயை தடுப்பதற்கு வழங்கப்படும் தடுப்பூசி போதியளவில் இல்லையென்பதையும்;

(iii) மேற்படி நோயை கட்டுப்படுத்துதல் தொடர்பாக குறிப்பிட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பல விடயங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அவ்வாறு செய்ததன் காரணமாக மேற்படி நோயைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையிலிருந்து அகற்றப்பட்ட விடயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விடயங்கள் அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மீண்டும் மேற்படி விடயங்களை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) மாடுகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை கட்டுப்படுத்தத் தேவையான ஔடதங்களை பற்றாக்குறையின்றி பெற்றுக்கொடுக்க எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி நோயினால் அழிவடையும் கால்நடை வளத்தை இனப்பெருக்கம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2016 பெப்புருவரி 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

71/ '15

கௌரவ புத்திக பத்திரண,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தளை மாநகர சபை பிரதான கட்டடத் தொகுதியில் பொருத்தப்பட்டிருந்த பழைய மூன்று இடிதாங்கிகளின் நிலக்கீழ் கம்பிகள் மற்றும் மாத்தளை நகர மத்தியில் அமைந்துள்ள பழைய கடிகாரக் கோபுரத்திலுள்ள கடிகாரத்தின் சில பகுதிகள் காணாமற்போயுள்ளதென்பதையும்;

(ii) காணாமற்போயுள்ள அப்பகுதிகள் வரலாற்றுப் பெறுமதிவாய்ந்தவைகள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சம்பவங்களைப் பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த முறைப்பாடுகள் கிடைத்த தேதிகள் யாவையென்பதையும்;

(iii) முறைப்பாட்டை செய்தவர்கள் யாவரென்பதையும்;

(iv) மேற்படி முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட தேதிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி விசாரணைகளை நடாத்திய உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்;

(vi) மேற்படி முறைப்பாடுகள் சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், இவ்வாறு குற்றஞ்சாட்டபட்டவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் இவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

223/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை ரூபா 2500/- ஆல் அதிகரிப்பதாக அறிவிக்கப்பட்டதென்பதையும்;

(ii) எனினும் 2015 நவம்பர் 01 ஆம் திகதி வரை தனியார்த் துறையின் எந்தவோர் ஊழியருக்கும் குறிப்பிட்ட ரூபா 2500/- சம்பள அதிகரிப்பு கிடைக்கவில்லை என்பதையும்;

(iii) அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூபா 10,000/- ஆல் அதிகரிக்கப்பட்டமையினால், 2016 ஆம் ஆண்டுக்காக நிலுவைச் சம்பளத்துடன் தனியார் துறையின் குறைந்தபட்ச சம்பளம் ரூபா 5000/- ஆல் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2015.11.01 ஆந் திகதியன்று உள்ளவாறு இலங்கையின் தனியார் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் முழு மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இவர்களில் ஊழியர் சேமலாப நிதியத்தில் பங்களிப்புப் பெறாத ஊழியர்கள் உள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

237/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஆம் ஆண்டில் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் சீனாவிலிருந்து பாடசாலை சீருடைத் துணியை கொள்வனவு செய்வதற்கான கட்டளை விடுக்கும்போது அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு முரணாக செயற்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபா 24 மில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010.11.02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை சீருடைத் துணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட அளவைத் தாண்டிய விதத்தில் பெற்றுக்கொண்டுள்ள துணிகளின் அளவு மற்றும் பெறுமதி யாதென்பதையும்;

(iii) சீருடைத் துணி இறக்குமதியின் போது ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக அரசாங்கத்துக்கு நேர்ந்துள்ள நஷ்டம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நஷ்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) குறிப்பிட்ட துணி கொள்வனவின்போது கேள்விப்பத்திர சபைக்கு முன்வைக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாதென்பதையும்;

(ii) இரண்டாவது கேள்விப் பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டமையால் அரசாங்கத்துக்கு நேர்ந்துள்ள நஷ்டம் எவ்வளவென்பதையும்;

(iii) இது தொடர்பில் கேள்விப்பத்திர சபை உத்தியோகத்தர்கள் சீனாவிற்கு மேற்கொண்ட பயணத்திற்கு செலவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iv) 2012.09.30 ஆம் திகதியளவில் களஞ்சியங்களுக்கு கிடைக்காதிருந்த துணிகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி துணி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

250/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்தில் 1000 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் கருத்திட்டத்திற்கு உரித்தான கெகிராவ கல்வி வலயத்தின் அ/கடான்டுகம ஜாயா முஸ்லிம் மகா வித்தியாலயமானது ஏனைய தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் க.பொ.த. (உயர் தரம்) வரையான வகுப்புகள் நடைபெறுகின்ற தமிழ் மொழி மூலமான ஒரே பாடசாலை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பிரதேசத்திலுள்ள ஏனைய குறைந்த வசதிகளைக் கொண்ட பத்தொன்பது (19) பாடசாலைகளின் சிறுவர்களுக்கும் தொழில்நுட்பவியல் கல்வியை கற்பதற்கான வசதிகளைக் கவனத்திற்கொண்டு மேற்படி பாடசாலை வளவில் தொழில்நுட்ப ஆய்வுகூடமொன்றை நிர்மாணிக்க அறிவுரை வழங்குவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

277/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) பாடசாலைச் சீருடைகளுக்காக பொதுவாக வருடாந்தம் விலைமனுக்கள் கோரப்படுகின்ற மாதம் யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டுக்காக விலைமனுக்கள் கோரப்பட்ட மாதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வழங்குநர்களை தீர்மானிக்கும் போது பெறுகைகள் வழிகாட்டல்களின் 7.9.6 பிரிவுக்கு அமைய உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற முன்னுரிமையை இத்தடவை பெற்றுக்கொடுக்காதிருப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இது உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கின்ற அரசாங்க கொள்கைக்கு முரண்படுகின்றதல்லவா என்பதையும்;

(iii) அவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொள்ள ஏதுவாயமைந்த காரணிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி தீர்மானம் காரணமாக, உள்நாட்டு புடவை உற்பத்தி தடைப்படுவதன் காரணமாக தொழில் வாய்ப்புக்களை இழப்பதற்கும் வெளிநாட்டுச் செலாவணி அநாவசியமாக செலவாவதற்கும் முடியும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைக்கான புடவைக்குப் பதிலாக பண உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) 2001 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பண உறுதிச்சீட்டுக்கள் வழங்குவதை அமுல்படுத்தியதுடன், அது தோல்வியான முறையெனத் தீர்மானித்து கைவிட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

285/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் பள்ளிவாசல்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று அமைச்சிடம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு நிதி ஒதுக்குகின்ற முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அறநெறிப் பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

(iii) அப்பணத் தொகை போதுமானதா என்பதையும்;

(iv) அவ்வாறின்றேல், அப்பணத்தொகையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது எத்திகதியில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

290/ '15

கௌரவ (டாக்டர்) ஏ. ஆர். ஏ. ஹபீஸ்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) அம்பாறை மாவட்டத்தின் தெஹிஅத்தகண்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பின்வரும் முகவரிகளைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் மிகவும் குறைந்த வருமானம் பெறுகின்ற விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(i) திரு. கே.ஜீ. சந்திரசேன, 18, ரிதீஎல

(ii) திரு. எச்.எம். ஆரியதாச, 12, மகாவலி வீடமைப்புக்கு அருகில், சந்தனகம

(iii) திருமதி எம்.எம்.கே. ஹேமமாலி, 128/1, துவாரகல

(iv) திருமதி கே.எம்.எம். மனோ ரஞ்சனீ, பம்பரவான

(v) திருமதி ஏ. இந்திராணி மல்காந்தி, பம்பரவான

(vi) திருமதி கே.எம். கருணாரத்ன, 209, ரன்ஹெலகம

(vii) திருமதி யூ.ஜீ. சுபாஷினீ, 299/2, துவாரகல

(ஆ) ஆமெனில், பாடசாலைக் கல்வி பயிலும் பிள்ளைகளோடு பல்வேறுபட்ட சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்ற இவர்களது குடிசை வீடுகளை மறுசீரமைத்துக்கொள்வதற்காக வீடமைப்பு உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

324/ '15

கௌரவ ( டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாலம்பே SAITM தனியார் மருத்துவ பட்டம் வழங்கும் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தற்போது அங்கு கல்வி பயிலும் மாணவர் குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு மாணவர் குழுவிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி மாணவர்கள் குறித்த நிறுவனத்துக்கு தகுதி பெறுவதற்காக க.பொ.த. (உயர்தர) அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் சித்தியடைந்த ஆண்டு, பாடத்துறை, மேற்படி பரீட்சையின் பெறுபேறு, "Z" புள்ளிபெறுமதி மற்றும் பரீட்சை இலக்கம் ஒவ்வொரு மாணவர் தொடர்பிலும் தனித்தனியே யாது என்பதையும்;

(v) மேற்படி நிறுவனத்தில் தற்போது உள்ள நிரந்தர விரிவுரையாளர் குழு அங்கத்தவர்களின் பெயர்கள், அவர்களின் கல்வித் தகைமைகள், அவர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திணைக்களங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# 2016 பெப்புருவரி 11, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

73/ '15

கௌரவ புத்திக பத்திரண,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.05.25 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்கு சற்று தொலைவிலுள்ள கடலில் அமைந்துள்ள மசகு எண்ணெய் அனுப்பும் குழாய் பழுதடைந்ததனால் மசகு எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு தாமதக் கட்டணம் செலுத்த நேரிட்ட கப்பல்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு கப்பலுக்கும் செலுத்திய பணம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) குழாயை திருத்துவதற்கு எத்தனை நாட்கள் எடுத்தன என்பதையும்;

(iv) இக் காரணத்தினால் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையாக மூடிவிடுவதற்கு நேரிட்ட நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) எரிபொருள் அனுப்பும் குழாய்க்கு ஏற்பட்ட இந்த சேதத்தினால் இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிதவைக்குத் தேவையான குழாய்களை கொள்வனவு செய்வதற்காக இறுதியாக கேள்விப் பத்திரம் கோரப்பட்ட திகதி எது என்பதையும்;

(ii) அவ்வாறெனின், கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த கம்பனிகள் மற்றும் அந்த கம்பனிகள் உரித்தாகும் நாடுகள் யாவை என்பதையும்;

(iii) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட கம்பனி யாதென்பதையும்;

(iv) அந்தக் கம்பனிக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

89/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) க.பொ.த.(சா. தரம்) சித்தியடைந்த இளைஞர் யுவதிகளை அரசாங்க அல்லது தனியார்துறையில் தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய முன்னர் அவர்களின் திறமைகள் மற்றும் ஆற்றல்களின் அடிப்படையில் இலவசமாக கைவினை அல்லது வாழ்க்கைத் தொழிற்பயிற்சியை வழங்குவதற்காக தற்போதுள்ள வசதிகள் போதுமானவையா;

(ii) அவ்வாறு இல்லாவிடின், அதிகரிக்கப்படவேண்டிய வசதிகளின் அளவு யாது;

(iii) வாழ்க்கைத் தொழில் மற்றும் கைவினைப் பயிற்சிக்காக உள்ள பாடத்திட்டங்கள் தற்காலத்திற்கு எந்தளவில் பொருத்தமாயுள்ளன; அவ்வாறின்றேல் போதுமானதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி பயிற்சிபெறுநர்களை எவ்விதமான அரசியல் அழுத்தமும் இன்றி, தகைமைகள் மற்றும் திறமைகளின் அடிப்படையில் மாத்திரம் அரச அல்லது தனியார்துறை தொழில்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான கொள்கை அல்லது பொருத்தமான முறையியலொன்றை தயாரிப்பாரா;

(ii) அரசாங்க வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகையில் நிரப்பப்பட உள்ள பதவிகளின் எண்ணிக்கையை அந்த அறிவித்தலுடன் பிரசுரிப்பதால் இளைஞர் யுவதிகள் அநாவசியமான எதிர்பார்ப்புக் குன்றுதல் களுக்கு உள்ளாவதை தவிர்க்க இயலுமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா;

(iii) ஆமெனில், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

224/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013.07.15 ஆந் திகதி உயர் தர பாடத்துறையில் தொழல்நுட்பவியல் என்ற பெயரில் புதிய பாடத்துறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஆரம்பத்தில் 252 பாடசாலைகளில் 14000 மாணவர்களுக்காக இந்தப் பாடத்துறை ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டில் பட்டப் பாடநெறிகளைக் கற்பதற்காக தொழில்நுட்பவியல் பாடத்துறையை தேர்ந்தெடுத்த 3000 மாணவர்களுக்கு இடவசதி வழங்கப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உடன்பட்டது என்பதையும்;

(iv) அரச பல்கலைக்கழகங்களில் பட்டப் பாடநெறிகளுக்கு மேலதிகமாக 6000 மாணவர்களுக்கு தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமையின் (NVQ) கீழ் கல்வியை வழங்குவதற்காக பல்கலைக்கழக கல்லூரிகள் (University Colleges) ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் தொழல்நுட்பவியல் பாடத்துறை அமுல்படுத்தப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இரண்டாவது குழுவாக அந்தப் பாடத்துறையை தெரிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) உயர் தரத்துக்காக தொழில்நுட்பவியல் பாடத்தைக் கற்ற மாணவர்களில் 2016 ஆம் ஆண்டில் பலகலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிடப்படும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

227/ '15

கௌரவ சுனில் ஹன்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுனாமி பேரழிவினால் சேதத்துக்கு உள்ளாகிய தமது வீட்டுக்குப் பதிலாக கூட்டாட்சி வீடுகளிலிருந்து ஒரு வீட்டைப் பெற்றுக்கொண்ட திரு. டபிள்யூ. பிரதீப்பின் பிள்ளையை 2013 ஆம் ஆண்டில் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தில் முதலாம் வகுப்புக்குச் சேர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிராகரிப்புகளின் பின்னர், சம்பந்தப்பட்ட சிறுமியை பாடசாலையில் அனுமதித்துவிட்டு அறிவிக்குமாறு தெரிவித்து அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் பாடசாலை அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி எழுத்து மூலமான அறிவித்தல் தொடர்பாக பாடசாலை அதிபரின் பதிற்செயற்பாடுகள் யாதென்பதையும்;

(iii) மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, சிறுமி பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி சிறுமி பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிராகரிப்புத் தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சிறுமிக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

267/ '15

கௌரவ எம்.எச்.எம் சல்மான்,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முஸ்லிம் பள்ளிவாசல்கள், தர்ம நம்பிக்கை பொறுப்புகள் சட்டத்தின் கீழ் முஸ்லிம் பள்ளிவாசல், ஜும்ஆ பள்ளிவாசல், தக்கியா, சாவியா போன்ற சமயத் தலங்களுக்கு சொந்தமான காணிகளையும் கட்டடங்களையும் (வக்ப் சொத்துக்கள்) அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சுவீகரிக்கையில், முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தை (வக்ப் பிரிவு) அறிவுறுத்தாமல் மேற்படி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வக்ப் சொத்துக்களை சுவீகரிக்கையில், பின்பற்ற வேண்டிய நடவடிக்கைமுறை (ஏற்புடைய சட்டத்தின் பிரகாரம்) தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் மற்றும் திகதி யாவை என்பதையும்;

(iii) அதன் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

287/ '15

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) கொலன்னாவ பிரதேசத்தின் ஊடாகச் செல்கின்ற 151, 714 மற்றும் 166 ஆம் இலக்க வீதிகளில் இலங்கை போக்குவரத்து சபையின் மூலம் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லையென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகளில் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படாமையினால் பாதிப்புக்குள்ளாகும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதிகளில் இ.போ.ச பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்காக நிரந்தரமான திட்டமொன்று உருவாக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வீதிகளில் போக்குவரத்து சேவைகளை ஆரம்பிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iv) மேற்படி வீதிகளில் ஈடுபடுத்தப்படும் பேருந்துகளுக்கு தனியார் பயணிகள் போக்குவரத்து சேவை வழங்குனர்களிடமிருந்தும் ஏனைய குழுக்களிடமிருந்தும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் தொந்தரவுகளை தடுத்து நிறுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

291/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கொழும்பு – கண்டி வீதியில் வீதியவத்தை தொடக்கம் நிட்டம்புவ வரையிலான பகுதியை விரிவாக்கும் கருத்திட்டத்திற்காக கல்எளிய, மஸ்ஜித் மாவத்தை, 5/1 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு. எம்.ஆர்.எம். மிம்சியாட்டுக்கு சொந்தமான ஙூ/392, காணித்துண்டு இலக்கம் 164 ஆம் பகுதி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இக்காணிக்கு இற்றைவரை நட்டஈடு வழங்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கொழும்பு – கண்டி பிரதான வீதியை நோக்கியதாக அமைந்துள்ள, வர்த்தக பிரதேசத்துடன் தொடர்புடைய மேற்படி காணித்துண்டு குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக அநீதிக்கு உள்ளாகியுள்ள திரு. மிம்சியாட்டுக்கு தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதியைக் கருத்திற்கொண்டு நட்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

302/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) இந்திய – இலங்கை பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு இந்தியாவுடன் அரசாங்கம் கலந்துரையாடி வருகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கை "சீபா" என்ற பெயரில் அழைக்கப்படுகின்ற விரிவான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதையும்;

(iv) இந்த உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதன் உள்ளடக்கம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினருடன் கலந்துரையாடப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

74/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் உள்ள தேசிய அடையாள அட்டை இல்லாத ஆட்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களுக்கு தேசிய அடையாள அட்டையொன்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது ஏன்;

(iii) இவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iv) ஆமெனில், அது எவ்வாறு;

(v) மேற்படி தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புதிய இலத்திரனியல் அடையாள அட்டைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றதா;

(ii) ஆமெனில், 18 வயதைத் தாண்டிய இலங்கைப் பிரசைகள் அனைவருக்கும் அத்திட்டத்தின்கீழ் அடையாள அட்டைகளை வழங்க இயலுமா;

(iii) அதற்கான திட்டங்கள் யாவை;

(iv) மேற்படி புதிய கருத்திட்டத்திற்காக செலவிட எதிர்பார்க்கின்ற பணத்தொகை எவ்வளவு;

(v) புதிய அடையாள அட்டைக்காக மக்களிடமிருந்து பணம் அறவிடப்படுமா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

288/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையில் பணியாற்றும் 'மேன் பவர்' ஊழியர்களின் சேவை நிரந்தரமாக்கப்படுமா என்பதையும்;

(ii) 'மேன் பவர்' ஊழியர்கள் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், ஆட்சேர்ப்பு முறையியல் யாதென்பதையும்;

(iv) ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2016 பெப்புருவரி 12, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

75/' 15

கௌரவ புத்திக பத்திறண,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு உரித்தான பின்தங்கிய தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் துல்லியமான வானிலை எதிர்வுகூறல்களை வழங்க முடியாதுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு மனித மற்றும் விருத்திசெய்யப்பட்ட பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கின்ற நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நவீன உபகரணங்கள் எவ்வாறான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்பதையும்;

(iv) மேற்படி உபகரணங்களுக்குச் செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

133/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரச பல்கலைக்கழகங்கள் அல்லாத நிறுவனங்களினால் நடத்தப்படும் பொறியியல், கணக்கீடு மற்றும் பிற தொழில்வாண்மை கற்கைநெறிகளின் எண்ணிக்கை நிறுவன ரீதியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் ஒவ்வொரு கற்கை நெறிக்காகவும் அறவிடும் கட்டணம் தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ்வரும் பல்கலைக்கழகங்களில் கட்டணம் அறவிட்டு நடத்தப்படும் கற்கை நெறிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கற்கைநெறி மற்றும் கற்கை நெறிக்காக அறவிடும் கட்டணம் தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை மேற்படி கட்டணங்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

220/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012.01.01 முதல் 2015.01.01 வரை இலங்கை பிரசைகளினால் அரச வங்கிகளிலிருந்து,

(i) பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மொத்த அடகுக் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தங்க நகைகளை அடகுவைத்து பெற்றுக்கொண்டுள்ள கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தங்க நகைகளை அடகு வைத்து கடன் பெற்றுக்கொண்டுள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

ஒவ்வொரு வங்கிக்குமேற்ப வெவ்வேறாக அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) தங்க நகைகளை அடகுவைத்து ரூபா இரண்டு இலட்சத்தை விட குறைவாக கடன் பெற்றுக்கொண்டுள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அக்கடன் தொகை ஒவ்வொரு வங்கியிலிருந்தும் மேலே குறிப்பிடப்பட்ட காலத்தினுள் வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகையின் சதவீதமாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

292/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட அ/பமுணுகம முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபர் பதவியை வகித்து வந்த திரு. ஏ. எச். சமூன் குறிப்பிட்டதொரு ஒழுக்காற்றுக் கட்டளையின் பேரில் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2:17 ஆம் பிரிவின் பிரகாரம் (தொடர்பு இலக்கம் උමැප/අපෙ/07/2/001) ஓய்வுபெறச் செய்யப்படுவதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

(iii) அதன் பிரகாரம் இவரது ஓய்வூதியப் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

294/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மோட்டர் சைக்கிள்களை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்துக்கு விண்ணப்பித்துள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களில் ஒரு சிலருக்கு மாத்திரம் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஒரு சிலருக்கு மாத்திரம் மோட்டார் சைக்கிள் வழங்கப்படுவதற்கான காரணம் யாது என்பதையும்;

(iii) ஏனைய வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

295/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அபிவிருத்தி நடடிவக்கைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வக்ப் ஆதனமான ரக்வான முஹியத்தீன் ஜும்மா பள்ளிவாசலுக்குரிய (பதிவு இல. R/236/R209) காணியின் ஒரு பகுதி சுவீகரிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(அ) (i) மேற்படி ஆதனத்தை சுவீகரிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காணித் துண்டுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

304/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வெளிவிவகார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகத் தமிழர் ஒன்றியத்தின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஜே. எம்மானு வேலுக்கு இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சனாதிபதி அழைப்பு விடுத்துள்ளாரா என்பதையும்;

(ii) ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1373 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் பயங்கரவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் அமைப்பாக பெயரிடப்பட்டு தடைசெய்யப்பட்டுள்ள உலக தமிழர் ஒன்றியத்தின் மீதான தடையை அரசு நீக்கியுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறு தடை நீக்கப்படுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உலக தமிழர் ஒன்றியம், புலிப் பயங்கரவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பாக கவலை தெரிவித்தோ அல்லது எதிர் காலத்தில் பயங்கரவாதத்துக்கு உதவுவதில்லை என்று உறுதியளித்தோ உள்ளதா என்பதையும்;

(ii) தமிழ் ஈழம் என்ற பெயரில் இலங்கையினுள் தனி நாடொன்றை உருவாக்கும் நோக்கத்திலிருந்து விலகியுள்ளதாக தந்தை எஸ்.ஜே. எம்மானுவேல் பிரகடனப்படுத்தியுள்ளாரா என்பதையும்;

(iii) இலங்கையினுள் தனி நாடொன்றை உருவாக்குவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவிகள் அல்லது ஒத்துழைப்பு வழங்குவது அரசியலமைப்பின் 157அ உறுப்புரையை மீறுகின்றதும் தண்டனை பெறக்கூடியதுமான தவறொன்றாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறான தவறொன்றைப் புரிபவருக்கு உதவுவதும் தவறாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

76/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் எப்பாவல பொஸ்பேட் நிறுவன வளாகத்தில் 850 மீற்றர் வீதிக்கு காபற் இடுவதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை வழங்குவதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் கையளிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்துக்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த நிறுவனங் களின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள், பணிப்பாளர் சபையின் பெயர்கள் மற்றும் கேள்விப்பத்திரத்தின் பெறுமதி ஒவ்வொரு நிறுவனத்துக்கும் அமைய வெவ்வேறாக யாவை என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) எப்பாவல பொஸ்பேட் நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி விசாரணையின் பெறுபேறுகள் யாவை என்பதையும்;

(iv) இன்றேல், விசாரணை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(vi) மேற்படி விசாரணையின் பெறுபேறுகளை இச் சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

225/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முன்னைய அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் "ஆயிரம் பாலங்கள்" என்ற பெயரில் விசேட கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) தெரிவுசெய்யப்பட்ட 1000 பாலங்கள், பிரதேச சபை வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆயிரம் பாலங்களைத் தெரிவுசெய்த முறையியல் மற்றும் சம்பந்தப்பட்ட திகதி மற்றும் ஆண்டு தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்திற்கென மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பணத்தொகை பெற்றுக்கொள்ளப்படும் உள்நாட்டு, வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்கான வட்டி வீதம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி ஆயிரம் பாலங்களை நிர்மாணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நிர்மாணக் கம்பனி யாதென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட கம்பனிகள் அல்லது நிறுவனங்களுடன் நிர்மாண ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்ட திகதி மற்றும் குறித்த ஒப்பந்தத்தின் படி நிர்மாணப் பணிகள் நிறைவுசெய்யப்பட வேண்டிய திகதி தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

293/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி சின்னக்குடியிருப்பு, ஆனவாசல் வீதி முகவரியில் வசிக்கும் திரு. எம்.எச்.எம். சாலிக்குரிய கற்பிட்டி பசார் வீதியில் அமைந்துள்ள "மௌலானா டெக்ஸ்டைல்ஸ்" வர்த்தக நிலையத்தை 2002.02.21 ஆந் திகதி குண்டர்கள் தீ வைத்து அழித்துள்ளனரென்பதையும்;

(ii) வியாபாரத்தை இழந்து நிர்க்கதியான நிலைக்கு உள்ளாகியுள்ள திரு. சாலியினால் இழப்பீட்டுத் தொகையொன்றை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்கள் புனர்வாழ்வளிப்பு அதிகாரசபைக்கு (இல. REP/PV/APP/2002) விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை இழப்பீடு எதுவும் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) பல வருடங்களாக பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு, அந்த விண்ணப்பம் தொடர்பாக காலம் கடத்தும் நிலைமை காணப்படுவதனால் இது தொடர்பாக ஆராய்ந்து திரு. சாலிக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

306/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2015 நவெம்பர் 10 ஆம் திகதி அல்லது அதை அண்மித்த ஒரு தினத்தில் அவுஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் ஜூலி பிசொப்பைச் சந்தித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட்ட பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கையில் அமைக்கப்படவுள்ள போர்க்குற்ற விசாரணை நீதிமன்றில் பணியாற்றுவதற்காக அவுஸ்திரேலிய நீதிபதிகளை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதிநிதிகள் குழுவினர் அரசாங்கத்தில் ஏதேனும் நிறைவேற்றுப் பதவிகளை வகிக்கின்றார்களா என்பதையும்.;

(ii) மேற்படி குழுவினர் சனாதிபதியவர்களின் விசேட தூதுவர்களாக அல்லது பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) இலங்கை சார்பில் இவ்வாறானதொரு வேண்டுகோளை விடுக்க இவர்களுக்கு உள்ள அதிகாரம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை அரசாங்கத்தின் அழைப்பேதுமின்றி அவுஸ்திரேலிய நீதிபதிகளை இந்நாட்டின் வழக்கு நடவடிக்கைகளுக்கென அனுப்பி வைக்க அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டா என்பதையும்;

(ii) உத்தேச போர்க்குற்ற விசாரணை நீதிமன்றத்தின் வழக்கு நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு நீதிபதிகளை அழைக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2016 பெப்புருவரி 23, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

55/ '15

கௌரவ புத்திக பத்திரண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) நகர்ப்புற பாடசாலைப் பிள்ளைகள் போதைப்பொருட் கடத்தல்காரர்களின் இரையாக மாறியுள்ளனர் என்பதையும்;

(ii) இக்கடத்தல்கள் பாடசாலைப் பிள்ளைகள் மூலம் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது போதைப்பொருட்கள் பாடசாலைகளுக்குள் கொண்டுவரப்படுவதை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த ஐந்து வருடங்களில் போதைப்பொருட்கள் தொடர்பான தவறுகளுக்காக கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களை மீண்டும் சமூகமயப்படுத்த அரசாங்கம் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் யாவை;

(iii) இவ்வாறு சமூகமயப்படுத்தப்பட்ட பிள்ளைகள் தொடர்பாக பின்னாய்வு செய்யும் செயல்முறையொன்று செயற்படுத்தப்படுகின்றதா;

(iv) ஆமெனில், அச்செயல்முறையுடன் தொடர்புடைய கட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

197/ '15

கௌரவ விஜித ஹேரத்,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) 2003 ஆம் ஆண்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் போது அதில் பணியாற்றிய 3100 ஊழியர்களில் சுமார் 1500 பேர் தொழில்களை இழந்தனர் என்பதையும்;

(ii) ஏதேனும் நிறுவனமொன்று 'பர்க்' நிறுவனத்தின் ஊடாக விற்பனை செய்யப்படும் போது ஊழியர்களுக்கு உரித்தாக வேண்டிய 10% நலனையும் இவர்கள் இழந்தார்கள் என்பதையும்;

(iii) உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின்படி கடந்த ஆட்சிக்காலத்தில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மீண்டும் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட போதிலும் தொழில் இழந்த ஊழியர்கள் அனைவரும் மீண்டும் சேவையில் அமர்த்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மீண்டும் தொழில் கிடைக்காத காரணத்தினால் அநீதிக்கு உள்ளான ஊழியர்களுக்கு தீர்வொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

199/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஏப்ரல் 05 ஆந் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை கொலொம்பியாவில் நடைபெற்ற உலக நகர மாநாட்டில் (WUF) கலந்துகொண்ட இலங்கை (அரசின்) பிரதிநிதிகள் குழு உறுப்பினர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அப்போது அவர்கள் வகித்த அரச பதவிகள் யாவையென்பதையும்;

(iii) அந்த பிரதிநிதிகள் குழு தெரிவுசெய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) அந்த விஜயத்திற்காக செலவிடப்பட்ட பணம் எவ்வளவு என்பதையும்;

(v) ஒவ்வொருவருக்காக ஏற்ற செலவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த விஜயத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் கலந்துகொண்டாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவரது பெயர், பாடசாலை, அவரது அப்போதைய வயது என்பன யாவை என்பதையும்;

(iii) அவருக்கு மாத்திரம் அந்த வாய்ப்பு வழங்கப்பட்டமைக்கான விசேட காரணம் யாதென்பதையும்;

(iv) குறிப்பிட்ட விஜயத்திற்காக அந்த மாணவன் கல்வி அமைச்சின் அனுமதியைப் பெற்றிருப்பின் அந்தக் கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) இந்த விஜயத்திற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருப்பின் அந்தக் கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

209/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு மாகாணத்தில், ஒலுவில் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு 2008ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக இதுவரை நட்டஈடு வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆளினதும் பெயர், முகவரி மற்றும் நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இதற்கென சுவீகரிக்கப்பட்ட 48 பேருக்குச் சொந்தமான 49.5 ஏக்கர் காணியின், காணிச் சொந்தக்காரர்களில் இதுவரை நட்டஈடு வழங்கப்படாதவர்களுக்கு காணியின் தற்போதைய விலை மதிப்பீட்டுப் பெறுமதியின்படி நட்டஈடு வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

232/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு–02, மோகன் வீதி, கிவ் பொய்ன்ட் இல் , 15 மற்றும் 15 A ஆம் இலக்கங்களைக் கொண்ட 02 ஏக்கர் 02 ரூட் 35 பர்சஸ் கொண்ட காணியுடனான ஏறத்தாழ 1600 சதுர மீற்றர் அளவிலான கட்டிடம் சட்ட விரோதமாக அரசியல் நட்பின்பேரில் ரூபா 25,000/- போன்றதொரு சிறு தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நிறுவனம் யாது; இதற்கான அங்கீகாரம் யாரால் வழங்கப்பட்டுள்ளது;

(ii) மேலே (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தை, வாடகைக்கு வழங்குகையில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை யாது;

(iii) மாதாந்த வாடகை யாரால் தீர்மானிக்கப்பட்டது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் இக்காணியில் 31 பர்சஸ் கொண்ட பகுதி ரூபா 125,000/- மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில் , 2014 ஆம் ஆண்டில், ரூபா 25,000/- மாதாந்த வாடகைக்கு 435 பர்சஸ் கொண்ட இக்காணியை வாடகைக்கு கொடுத்ததன் மூலம், துறைமுக அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது;

(iii) இந்நிதி மோசடி தொடர்பில் மேற்கொள்ளப்படும் புலனாய்வின் தற்போதைய நிலைமை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

256/ '15

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில்,

(i) சிறுவர் துர்நடத்தை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை வருடாந்த ரீதியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) சிறுவர் துர்நடத்தை பற்றிய வழக்குகளில் தவறாளிகளென நிரூபிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) சிறுவர் துர்நடத்தை பற்றிய வழக்குகளில் தவறாளிகளென நிரூபிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு வருடமும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையின் சதவீதமாக தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

259/ '15

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 சனாதிபதித் தேர்தலின்போது சனாதிபதி வேட்பாளரான, தற்போதைய சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் முன்வைக்கப்பட்ட "மைத்திரி ஆட்சியும் நூறு நாட்களில் புதியதொரு நாடும்" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் 26 ஆம் இலக்கத்தின் பிரகாரம், அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய மிகை வட்டி மற்றும் அபராதத் தொகை, ரூபா இரண்டு இலட்சம் உச்சமட்ட பெறுமதிக்கு உட்பட்ட வகையில் பதிவழிக்கப்படுமென அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி வட்டியும் அபராதத் தொகையும் பதிவழிக்கப்பட்டதன் காரணமாக வங்கிகளால் இழக்கப்பட்ட வட்டித் தொகை மற்றும் அபராதத் தொகை வருமானம் ஒவ்வொரு வங்கியின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

261/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. எஸ்.எம். ஜெசீர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மட்டக்களப்பு - பொலன்னறுவை புகையிரத ஒதுக்குக் காணியில் (பூணானி, ரிதிதென்ன என்ற இடத்தில் அமைந்துள்ள) நீண்ட காலமாக வசித்து வருகின்றார்கள் என்பதையும்;

(ii) அந்தக் காணித்துண்டை புகையிரதத் திணைக்களத்தினூடாக நீண்ட காலக் குத்தகை உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்வதற்காக இவர் விண்ணப்பித்துள்ளார் என்பதையும் (கடிதக் கோப்பு இல. பு.மு./கி.பு.தி/ புதியகுத்தகை/ 2012);

அவர் அறிவாரா?

(ஆ) வசிப்பதற்கு நிரந்தரமான வீடோ அல்லது காணியோ இல்லாமல் நிர்க்கதி நிலையிலிருக்கும் திரு. ஜெசீருக்கு சட்ட ரீதியாக குத்தகை உடன்படிக்கையின் மூலம் புகையிரத ஒதுக்குக் காணியின் ஒரு பகுதியை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துவாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

271/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முன்னாள் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர், உலக சந்தையின் விலைகளுக்கு ஏற்ப உள்ளூர் சந்தையில் விலை மாற்றமடையும் விலைச் சூத்திரமொன்றை அறிமுகப்படுத்துவதாக 2015 சனவரி மாதம் 16ஆந் திகதி அறிவித்தார் என்பதை அவர் அறிவாரா;

(ii) இதுவரை அத்தகைய ஒரு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்படாமைக்கான காரணம் யாது;

(iii) அத்தகைய ஒரு விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

280/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீதொட்டமுல்லை குப்பை மேட்டை அகற்ற நடவடிக்கை எடுப்பாரா;

(ii) நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்ட மீதொட்டமுல்லை குப்பை மேட்டை மீள்சுழற்சிப்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) இதற்காக வழங்கப்படும் அரச தலையீடு யாது;

(iv) இந்த மீள்சுழற்சி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மீள்சுழற்சி வேலைத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ் கொழும்பு நகர கழிவுகள் மீள்சுழற்சிக்கு ஆற்றுப்படுத்தப்படுமா;

(ii) ஆமெனில், இரண்டாம் கட்டத்தின் கீழ் மீதொட்டமுல்லை குப்பை மேட்டிலுள்ள கழிவுகளை மீள்சுழற்சிக்கு ஆற்றுப்படுத்தப்படுமா;

(iii) மேற்படி குப்பை மேட்டின் காரணமாக பாதிப்புக்குள்ளாகியிருக்கும் குப்பை மேட்டுக்கு பக்கத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு நியாயம் வழங்க கொழும்பு மாநகர சபையுடன் சேர்ந்து வேலைத்திட்டமொன்று அமைக்கப்பட்டுள்ளதா ;

(iv) ஆமெனில், இது தொடர்பான விபரமான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

307/ '15

கௌரவ ஹேசா விதானகே,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரியவெவ கிரிக்கட் விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அப்பணத் தொகை எவ்வாறு பெறப்பட்டதென்பதையும்;

(iii) அதன் நிர்மாணப் பணிகள் முடிவுறுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இற்றைவரை இங்கு நடத்தப்பட்டுள்ள சர்வதேச ஒருநாள், டெஸ்ட் மற்றும் இருபது இருபது போட்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) எதிர்வரும் ஆண்டில் போட்டிகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி விளையாட்டரங்கு திருமண வைபவங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக நாளொன்றுக்கு அறவிடப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எதிர்வரும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

308/ '15

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமாகம தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கு 2009 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அப்பணத்தொகை விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) இன்றேல், அப்பணத்தொகை எந்த விடயத்திற்காக செலவிடப்பட்டது என்பதையும்;

(iv) இப்பணத்தொகைக்கு மேலதிகமாக விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்கு வெளிநாட்டு உதவி அல்லது வேறு உள்நாட்டு நிதியங்கள் பெற்றுக்கொள்ளப் பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2011 கிரிக்கட் உலகக் கிண்ண போட்டிகளுக்கென விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச கிரிக்கட் பேரவையிலிருந்து கிடைக்கப் பெற்ற பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) கெத்தாராம, பல்லேகலே, சூரியவெவ விளையாட்டரங்குகளை நவீனமயப் படுத்துவதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டரங்குகளின் நவீனமயப்படுத்தல் அல்லது நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) நவீனமயப்படுத்தல் அல்லது நிர்மாணப் பணிகளுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு விளையாட்டரங்கு தொடர்பிலும் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நவீனமயப்படுத்தல் அல்லது நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

58/ '15

கௌரவ புத்திக பத்திரண,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வட மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் அரசாங்க செலவில் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெளிநாட்டு விஜயங்களில் கலந்துகொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையும், இவர்களது பெயர்களும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உறுப்பினர்களின் வெளிநாட்டு விஜயங்களுக்காக மாகாண சபை செலவிட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு உறுப்பினர் சார்பிலும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி உறுப்பினர்களின் வெளிநாட்டு விஜயங்களுக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி விஜயங்களின் மூலம் நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) உறுப்பினர்களுக்கு மேலதிகமாக மாகாணசபையின் செலவில் வேறு ஆட்கள் வெளிநாட்டு விஜயங்களில் கலந்துகொண்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களது பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நபர்கள் வெளிநாடு செல்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலமாக நாட்டுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?